THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, 17th August 1955.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at half-past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTHAVATSALU NAIDU) in the Chair.

I.—ANNOUNCEMENT *RE* RESIGNATION OF THE HON. SPEAKER.

DEPUTY SPEAKER :—" I have to announce to the House that under the provisions of clause (*b*) of Article 179 of the Constitution, Sri J. Sivashanmugam Pillai, has resigned his office as Speaker of the Madras Legislative Assembly and also his Membership of this Assembly under the provisions of clause (3) (*b*) of Article 190 of the Constitution with effect from the 16th August 1955."

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—RESOLUTION *RE* HOMAGE TO GOA MARTYRS.

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Deputy Speaker, Sir, I crave your indulgence to interrupt the business of the House and move the following resolution :—

> ' *The House pays its homage to the memory of the Martyrs who have laid down their lives in the cause of the liberation of Goa from foreign domination. The Assembly is shocked at the brutal and uncivilized behaviour of the Portuguese authorities in shooting down peaceful and unarmed Satyagrahis in violation of all accepted canons of International Law.*'

" Sir, as we were celebrating the Independence Day in our country, in a corner of the soil of our own country a different drama was being enacted. Unarmed Satyagrahis were shot down by the Portuguese authorities. For what offence? For proclaiming to the world that Goa also forms part of India. Therefore, it is but natural that on that Independence Day the Indian Flag should be hoisted within that Goa territory and for making that peaceful attempt they were shot down. Sir, this incident is of very great significance. In my view in this incident I see the spirit of man pitted against the brute in man. It may be for the present the spirit has received a set back but I have absolutely no doubt that the spirit will ultimately triumph. But that triumph can be complete not by the spirit converting itself into the brute but by the transformation of the brute into the spirit. That is the great message which the Father of the Nation has left behind for us and it is that which our great Prime Minister tries to follow. This is an hour of trial for us because in spite of our strength and in spite of the smallness of the problem we are unable to use our

strength with violence for solving this problem. As a matter of fact, we will be defeating our very purpose if we use our strength and try to resolve this problem by using violence and it is because of the very strength the approach we have made becomes all the more significant to the entire humanity that it is possible and that it will be possible to resolve human problems and international problems by peaceful methods. So, I am sure, Sir, in this great experiment with Ahimsa which is going on now, the entire House and the people of the State will be behind the Government of India and the Leader of the Nation—the Prime Minister, Pandit Jawaharlal Nehru.''

8-39 a.m. **Sri P. RAMAMURTHI** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கோவாவில் விடுதலைக்காக உயிர் நீத்த தியாகிகளைக் குறித்து இந்த நாடு பூராவும் ஒரு புறத்தில் வருத்தம் அடைந்திருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் நம் நாட்டில் இத்தகைய வீரர்கள் தியாகம் புரிந்திருக்கிறார்களே என்பதை நினைக்க கர்வம் ஒருபுறம் ஏற்பட்டிருக்கிறது. துப்பாக்கி முனையை நேர் நோக்கி துப்பாக்கியால் சுடப்படுவோம் என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தபோதிலுங்கூட 'கொடியை ஏந்திச் செல்வோம், எங்கள் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்போம்' என்ற வீரர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்று இந்நாட்டு மக்களனைவரும் கவுரவப்படக்கூடிய கம்பீரமான சந்தர்ப்பத்தில் நாம் இன்று கூடியிருக்கிறோம்.

" ஆகஸ்டு 15-ந் தேதி நமக்கு ஒரு மிகவும் புனிதமான தினம். பல ஆண்டுகளுக்கு முன்பு பாரதியார் பாடினார். 'மற்றை நாட்டு மக்களுக்கு முன்பு நிற்கும்போது எங்கள் நாட்டுக்கென்று ஒரு கொடி கிடையாது' என்று மண்டிக் கிடக்கும் வெட்கத்தின்மீது ஆணையிட்டுப் பாடினார். அதன் மீது ஆணையிட்டுக் கூடுகிறோம். நாங்கள் சுதந்திரம் அடைந்து, எங்களுக்கென்று ஒரு கொடியை நாங்கள் ஏந்திச் செல்வோம் என்று ஆணையிட்டு சபதம் ஏற்றார். அந்தச் சபதம் அநேகமாக நிறைவேறிவிட்டது.

" முப்பத்து மூன்று கோடி மக்களில், கோவா பிரதேச மக்கள் நீங்கலாக யாக்கி இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் உலக மக்களுக்கு முன்பு செல்லும் காலத்தில் நாங்கள் ஆதியில் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நிலைமை இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்பட்டது. ஆனால், ஒரு சிறு பிரதேசம்—ஒரு சிறு ராஜ்யம்—இன்றைக்கு உலகில் இருக்கக்கூடிய மிகப் பெரிய வல்லரசுகளில் ஒன்று—மிகப் பெரிய வல்லரசுகளில் ஒன்று என்றுகூடச் சொல்லிவிட முடியாது—அந்த ஒரு சிறிய ஏகாதிபத்தியம், இந்த நாட்டினுடைய மண்ணின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு இன்னும் எங்களுக்குத்தான் ஆதிபத்திய உரிமை இருக்கிறது என்று கொக்கரித்துக்கொண்டு இருக்கக்கூடிய நேரத்தில் நாம் இருக்கிறோம். ஆகஸ்டு 15-ந் தேதியன்று இந்தியக் கொடி இந்த நாட்டினுடைய மண் பூராவிலும் பறக்கும்; வேறு எந்த நாட்டினுடைய கொடிக்கும் பறப்பதற்கு இடம் கிடையாது என்று ஊர்ஜிதம் செய்கிற வகையில் நம் நாட்டு மக்கள் சாத்வீகமான முறையில் கோவா எல்லைக்குள் சென்றார்கள். அப்படிச் சென்றவர்கள் அக்கிரமமாக தாக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? அவர்களுக்குச் சர்வதேசச் சட்டத்தைப் பற்றிக்கூட கவலையில்லை. சாதாரணமாக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குச் சென்றால், அந்த நாட்டு அரசாங்க உத்தரவின்றி சென்றாலுங்கூட, குற்றம் ஏதாவது செய்தாலுங்கூட அவர்களைத் தடுப்பதற்கோ, சிறையில் அடைப்பதற்கோ அதிகாரம் கிடையாது. அப்படியிருக்க யாதொரு குற்றமும் செய்யாதவர்களை அவர்கள் தாக்கியிருக்கிறார்கள். சர்வதேசச் சட்டங்கள் எதையும் லட்சியம் செய்யாமல் சுட்டு வீழ்த்தி, மிருகத்தனமாக, மிலேச்சாதிகாரமாக, அநர்கரீகமான முறையில் கோவா போலீசார்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

17th August 1955] [Sri P. Ramamurthi]

" ஆகவே, நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்துவதற்கு அந்த ஏகாதிபத்தியத்திற்கு எங்கிருந்து தைரியம் கிடைத்தது என்பதை நாம் யோசிக்கவேண்டும். இது உலகறிந்த விஷயம். சின்னஞ்சிறு பிரதேசம் தன்னந்தனியே நின்றுகொண்டு, பலம் பொருந்திய இந்திய நாட்டு மக்களின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்றால், அதற்குக் காரணம் என்ன ? அதற்கு பக்கபலமாக இருக்கும் சக்திகள் என்ன ? கோவாவை அடக்கி ஆண்டு கொண்டிருக்கும் ஏகாதிபத்தியத்திற்குப் பக்கபலமாக சில வல்லரசுகள் இருக்கத்தான் செய்கின்றன என்பது உலகறிந்த விஷயம்.

" நான்கைந்து மாதங்களுக்குமுன் நமது நாட்டின் பிரதம மந்திரி பண்டித நேரு பார்லிமெண்டில் பேசக்கூடிய காலத்தில், 'நாட்டோ' ஒப்பந்தத்தின்படி ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பாவிலிருந்து கிழக்கே வெகு தூரம் இந்தியாவுக்கு வந்து காலனி ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு வந்துவிட்டன என்று கூறினார். அதையேதான் சமீபத்தில் நடந்திருக்கக்கூடிய சம்பவங்கள் ஊர்ஜிதம் செய்கின்றன.

" இந்த சம்பவத்தில் ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டியது பஞ்சசீலக் கோட்பாடுகள். அவைகளை நம் நாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதன் முக்கியமான அம்சங்களில் ஒன்று ஒரு தேசத்தின் உள்நாட்டு விவகாரத்தில் வேறு எந்த நாட்டு அரசாங்கமும் தலையிட உரிமை கிடையாது என்பது. கோவா சம்பந்தப்பட்டவரை, கோவா இந்திய நாட்டைச் சேர்ந்த ஒரு பிரச்னையாகும். கோவா இந்தியாவைச் சேர்ந்தது என்ற அடிப்படையில் இந்த நாட்டில் வேறொருவன் ஆட்சி செய்யமுடியாது. இந்த நாட்டில் வேறொருவன் ஆட்சி செலுத்தினால் அவனை வெளியேற்றுவது இந்திய நாட்டு மக்களுடைய பிரச்னை. இந்த நாட்டு அரசாங்கத்தினுடைய பிரச்னை. கோவாவில் அந்நிய ஆட்சி இருப்பதானது நம் நாட்டு உள்நாட்டு விவகாரத்தில் அந்நிய நாடு தலையிட்டுக் கொண்டிருப்பதாகும். அப்படியிருப்பது நாம் ஒப்புகொண்டிருக்கும் பஞ்சசீலக் கோட்பாடுகளுக்கு முரணானதாகும். பஞ்சசீலக் கோட்பாடுகளை நாம் ஊர்ஜிதம் செய்யவேண்டியது நம் முன் இருக்கும் மிகப் பெரிய கடமையாகும். மற்ற விஷயங்களுக்கு நான் போக விரும்பவில்லை. அதைப்பற்றி நான் இப்பொழுது பேசுவது அசந்தர்ப்பமாக இருக்கும்.

" சர்க்கார்க் கட்சித் தலைவர் ஸ்ரீ சுப்ரமண்யம் அவர்கள் கூறியபடி, முறைகளைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. எப்பொழுது நாம் பஞ்சசீலக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ அதன்படி நாம் நடந்துகொள்ளவேண்டும். நம் நாட்டு உள்நாட்டு விவகாரத்தில் பிறநாடுகள் தலையிடாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். அந்த முறையில் நாம் காப்பாற்றினால் தான் பஞ்சசீலக் கொள்கைகளுக்கு நாம் அஸ்திவாரம் இட்டவர்களாவோம். நமது உள்நாட்டு விவகாரத்தில் வேறு எந்த அரசாங்கமும் தலையிடக்கூடாது என்ற கொள்கையைக் காப்பாற்றுவதற்காக, கோவாவைப் பொறுத்தவரையில் அங்கு அந்நிய ஏகாதிபத்தியம் இனியும் நிலைத்திருக்காமல் செய்வதற்கு மேலும் மேலும் இந்த நாட்டு மக்கள் உயிரைத் தியாகம் செய்வதற்கு லட்சோப லட்சம் பேர்கள் வரத்தான் செய்வார்கள். நாட்டில் சுதந்திர தாகம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சுதந்திர தாகமும், சுதந்திர உணர்ச்சியும் ஏற்பட்டுவிட்டால் மக்களுடைய அந்த தாகத்தைத் தணிக்க முடியாது. ஆகையால், இறுதியில் சுதந்திர தாகம் உள்ள மக்கள்தான் வெற்றி பெறுவார்கள். நமது பக்கத்தில் சத்தியம் இருக்கிறது, உண்மை இருக்கிறது, நியாயம் இருக்கிறது. மனித வர்க்கத்தினுடைய உன்னதமான அபிலாஷைகள் நமது பக்கத்தில் இருக்கின்றன. இவ்வளவு மகத்தான தியாகம் செய்திருக்கக்கூடியவர்களை நாம் இப்பொழுது ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். உயிர்நீத்த 29 தோழர்களையும் நாம் இப்பொழுது ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். அவர்கள் மிகப் பெரும் பாரம்பரியத்தில் சேர்ந்துவிட்டார்கள். நாட்டின் விடுதலைக்காக நீண்ட நெடுங்காலமாக போர் செய்து உயிர் நீத்த தியாகிகள் அனந்தம். அப்படிப்பட்டவர்களின் மிகப் பெரிய தேசிய பரம்பரையில் அவர்கள்

[Sri P. Ramamurthi] [17th August 1955

சேர்ந்துவிட்டார்கள். அவர்கள் சேர்ந்துவிட்ட போதிலும் இன்னும் உயிருடன் இருந்துகொண்டிருக்கிறார்கள். சுதந்திர உணர்ச்சியானது பரம்பரை பரம்பரையாக இருந்துவந்திருக்கிறது. வாழ்க இந்த வீரர்கள் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்."

DEPUTY SPEAKER :—" The question is—

' The House pays its homage to the memory of the martyrs who have laid down their lives in the cause of the liberation of Goa from foreign domination. The Assembly is shocked at the brutal and uncivilized behaviour of the Potuguese authorities in shooting down peaceful and unarmed Satyagrahis in violation of all accepted canons of International Law.' "

The motion was passed *nem. con.* all the Members standing.

The House then stood in silence for two minutes.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, may I submit to the House that as a mark of respect to the departed, we adjourn the House without transacting any further business."

DEPUTY SPEAKER :—" Official business will be transacted to-morrow and the Leaders of Parties have agreed to the same. The agenda and the list of questions for to-day will be taken up to-morrow."

The House is adjourned and will meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS